கடந்த 1953-லிருந்து இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அதற்கு மேலும் ஒரு பொதுவான இடம், அரசு புறம் போக்கு நிலம் ஒன்று உள்ளது. அந்த நிலத்திலே வருகின்ற நிதியாண்டிலாவது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக விடுதி கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாணவியர்க்கு மட்டும் புதிய விடுதி திறப்பது மற்றும் விடுதிக் கட்டிடம் கட்டுவது என அரசின் கொள்கையாக இருப்பதால் மாணவர் விடுதி இப்போது புதிதாகத் திறக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.15

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவியருக்கு மட்டும் விடுதி கட்டப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அதைப்போல காவேரிப்பட்டணம் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு இந்த நிதியாண்டில் விடுதி கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டணத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் பள்ளி மாணவியர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1. திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

1. திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை தொடங்குதல்.

***34044*—திரு. எம். கே. சுந்தரம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்கிட அரசுத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், தற்பொழுது அச்செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1994 மார்ச் 29]

(ஆ) திருவண்ணாமலை பகுதியில் இரும்புத்தாது இருப்பு குறித்து சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றினைத் தயாரிக்கும் பணியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகருக்கு வருகை புரிந்த எங்களுடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்கள் மாவட்டத்திலே சில பகுதிகளில் இரும்புத்தாது கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதால் டிட்கோ மூலம் நிலத்திலிருந்து எவ்வாறு இரும்புத் தாதுவை பிரித்து எடுத்து உபயோகப்படுத்த முடியும் என்று புதிய யுக்தியுடன் ஆய்ந்து, இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு அத்தனை முயற்சிகளையும், மேற்கொள்ளப் படும் என்று அறிவித்ததற்காக எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாக எங்களுடைய மனித தெய்வத்தின் பாதத்தைத் தொட்டு (மேசையைத்தட்டும் ஒலி) தமிழ் நாட்டு மக்களின் சார்பிலும், எங்கள் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இதை எந்தக் காலத்திற்குள்ளாக செய்து முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் கிடைக்கக்கூடிய இரும்புத் தாதுவைக் கொண்டு தமிழ் நாட்டில், ஒரு சிறிய ஸ்பான்ச் இரும்பு ஆலை அமைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பற்றி விவாதிக்க தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தஸ்தூர் அண்ட் கோ என்ற ஆலோசனை நிறுவனத்தைக் கேட்டுள்ளது. இந்த அறிக்கை 6 மாதக் காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. அறிக்கை கிடைத்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடி நின்றவர் வள்ளலார்' என்று சொல்வார்கள். வள்ளலாருக்கு மேலே இன்றைக்கு எங்களுடைய இதயத்தில் தெய்வமாக வீற்றிருக்கிற, எங்களைப் பெறாமல் பெற்றெடுத்த அன்புத் தாய், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய புனித அரசிலே, எங்களுடைய மாவட்டம் பிரிக்கப்படாத வடாற்காடு மாவட்டமாக இருந்தபோது இருந்த அத்தனை தொழிற்சாலைகளும் பிரிக்கப்பட்டதற்குப் பின்னால் வடாற்காடு அம்பேத்கார்—-மாவட்டத்திற்குச் சென்று இன்றைக்கு திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லையென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.' 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். ஆனால் தட்டாமலேயே திறக்கிற ஒரு அரசு எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு என்பதை இன்றைக்கு தமிழகத்திலே மட்டுமல்ல,

இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற மக்கள் மட்டுமல்ல, அகில உலகிலும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட புரட்சித் தாயினுடைய புனித அரசிலே இன்றைக்கு இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஆறு மாதக் காலம் ஆகும் என்று போற்றுதலுக்குரிய அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படி தொழிற்சாலையே இல்லாமல் இருக்கிற எங்கள் திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் உடனடியாகத் தொழிற்சாலை உள்ள மாவட்டம் என்று நிரூபிக்கிற அளவிலே வேறு ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் உடன் முன் வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில் தொழிற்சாலையே இல்லை என்பது என் கவனத்திற்கு வந்த பிறகு, இந்த இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி ஒரு பெரிய தொழிற்சாலையை உருவாக்குவதற்கு சில நாட்கள் ஆகும், சில காலம் ஆகும் என்பதை அறிந்த பிறகு, நானாகவே அங்கே சிறு தொழில்பேட்டை - சிறு தொழில்கள் அடங்கிய ஒரு தொழில்பேட்டையைத் தொடங்க வேண்டுமென்று கருதி, அதனை சிப்காட் வாயிலாகவோ, சிட்கோ மூலமாகவோ செய்ய வேண்டுமென்று ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடலூரில் கல்வி நிறுவனங்களில்......

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், பெரம்பலூரில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு பிரச்சினையை எடுத்துக் கொள்ளப் போகிறேன். தாங்கள் கொடுத்த அந்தப் பிரச்சினை குறித்து பொது விவாதத்தில் தெரிவிக்கலாம் என்பதால் அதற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) அனுமதி மறுத்ததைப் பற்றி இங்கே சொல்ல முடியாது. இன்றைக்கு இன்னொரு பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.